**செய்தி வெளியீடு**
**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செ.வெ.எண்.08** **நாள் : 06.01.2019**

**மெரினா கடற்கரை மற்றும் லூப் சாலையில் உள்ள கடைகளை ஒழுங்குப்படுத்துதல் தொடர்பான கருத்து கேட்புக் கூட்டம் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் சென்னை பெருநகர காவல்துறை ஆணையர் திரு.ஏ.கே.விஸ்வநாதன், இ.கா.ப., அவர்கள் தலைமையில் 05.01.2019 அன்று நடைபெற்றது.**

உலகின் இரண்டாவது பெரிய கடற்கரையான சென்னை மெரினா கடற்கரைக்கு தினந்தோறும் பல்லாயிரக்கணக்கான பொதுமக்களும், வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் வந்து செல்கின்றனர். மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்ற உத்திரவின்படி சென்னை மெரினா கடற்கரையில் உள்ள சிறு கடைகள் வரிசைப்படுத்தப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களும் மெரினா கடற்கரையை தூய்மையாக பராமரிக்க மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்ற உத்திரவின்படியும் அதே நேரத்தில் அங்குள்ள மீனவர்கள் மற்றும் சிறுகடை வியாபாரிகளின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையிலும் பணிகளை மேற்கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்கினார்கள்.

இதனை தொடர்ந்து மெரினா கடற்கரை மற்றும் லூப் சாலையில் உள்ள சிறு கடைகள் மற்றும் மீன் கடைகளை ஒழுங்குப்படுத்துதல் மற்றும் தூய்மையாக பராமரித்தல் தொடர்பாக பல்வேறு மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள், மெரினா கடற்கரையிலுள்ள வியாபாரிகள் சங்கப் பிரதிநிதிகளுடன் கருத்து கேட்புக்கூட்டம் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் சென்னை பெருநகர காவல்துறை ஆணையர் திரு.ஏ.கே.விஸ்வநாதன், இ.கா.ப., அவர்கள் தலைமையில் 05.01.2019 அன்று ரிப்பன் மாளிகை வளாகத்திலுள்ள உள்ள அம்மா மாளிகை கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்ற உத்திரவின்படி, மெரினா கடற்கரை மற்றும் அணுகு (லூப்) சாலையிலுள்ள சிறு கடைகள் மற்றும் மீன்கடைகள் வரிசைப்படுத்தப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. இதில் மெரினா கடற்கரையில் ஆங்காங்கே இருந்த சிறு கடைகள் ஒழுங்குப்படுத்தப்பட்டு வியாபாரிகளின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் உழைப்பாளர் சிலை முதல் மெரினா நீச்சல் குளம் வரை 4 வரிசைகளாகவும், உழைப்பாளர் சிலைக்கு குறுக்கு வாட்டில் 2 வரிசைகளாகவும், மெரினா நீச்சல் குளம் முதல் காந்தி சிலை வரை 9 வரிசைகளாகவும், காந்தி சிலை முதல் கலங்கரைவிளக்கம் வரை 3 வரிசைகளாகவும், காந்தி சிலை

அருகில் குறுக்கு வாட்டில் 1 வரிசையும் என சிறுகடைகள் வியாபாரிகளின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் முறைப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், ஸ்வதேஷ் தர்ஷன் திட்டத்தின் கீழ் கடற்கரைக்கு வரும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக 2 பொதுக்கழிவறைகள், 4 சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் இணைப்புகள் 16 நவீன உபகரணங்களை கொண்ட உடற்பயிற்சி கூடம், நீர் தெளிப்பான்களுடன் கூடிய 6 புல்வெளிகள், பொதுமக்கள் அமர 20 நிழற்குடைகள், 1600 மீ நீளத்திற்கு அணுகு சாலையை ஒட்டி தடுப்பு சுவர் மற்றும் மாற்று திறனாளிகள் கடற்கரையை கண்டுகளிக்க ஏதுவாக 2 தனிப்பாதைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. கடற்கரையை மேலும் தூய்மையாக வைத்துக்கொள்ள 6 நவீன மணல்பரப்பை சுத்தம் செய்யும் இயந்திரங்களும், 52 புதிய குப்பைத்தொட்டிகளும் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. இதே போன்று மெரினா கடற்கரை அருகே உள்ள லூப் சாலையில் போக்குவரத்திற்கு இடையூறாக இருந்த மீன்கடைகளும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்திரவின்படி, வரிசைப்படுத்தப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்திரவின்படி, மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், மீனவர்களுக்கு நவீன வசதிகளுடன் கூடிய மீன் அங்காடிகள் அமைக்கப்படவுள்ளன. இதனை மீனவர்கள் பயன்படுத்திக்கொண்டு மெரினா கடற்கரையின் தூய்மையை பாதுகாக்க அனைவரும் தங்களது பங்களிப்பை அளிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில், சென்னை மாநகர காவல் ஆணையாளர் திரு.ஏ.கே.விஸ்வநாதன் இ.கா.ப., அவர்கள் மெரினா கடற்கரையை சுத்தமாகவும் தூய்மையாகவும் பராமரிக்க சென்னை உயர்நீதிமன்ற உத்திரவின்படியும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும், பெருநகர சென்னை மாநகராட்சியும், காவல்துறையும் இணைந்து பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக மெரினா கடற்கரை லூப் சாலையிலிருந்த சிறுகடைகள் மற்றும் மீன்கடைகள் வரிசைப்படுத்தப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. மெரினா கடற்கரையில் விதிமுறைகளின்படி, பொழுதுபோக்கு கடைகள் மற்றும் சிற்றூண்டி கடைகள் மட்டுமே இருக்க வேண்டும். இதில் சிற்றூண்டி கடைகளில் அங்கேயே உணவு பொருட்களை சமைத்து தயாரித்தல் கூடாது. இதை வியாபாரிகள் கடைபிடிக்க வேண்டும். மெரினா கடற்கரைக்கு வரும் பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளின் பாதுகாப்பிற்காக மேலும் புதிய உயர்கோபுர மின்விளக்குகளும், கண்காணிப்பு கேமாராக்களும் அமைக்கப்படவுள்ளன என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட மீனவ சங்க பிரதிநிதிகள் மற்றும் வியாபாரிகள் தங்கள் வாழ்வாதாரத்தை பாதிக்காத வகையில் கடைகளை முறைப்படுத்த வேண்டும் எனவும், அரசு புதியதாக கட்டபடவுள்ள நவீன மீன் அங்காடிகளை 100 சதவீதம் பயன்படுத்திக்கொள்ளவும்,

உலகின் சிறந்த கடற்கரையை சுத்தமாகவும், தூய்மையாகவும் பராமரிக்க தங்களது முழு ஒத்துழைப்பை அளிப்பதாகவும் உறுதியளித்தனர்.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு மீன்வளத்துறை இயக்குநர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., துணை ஆணையர் (வ (ம) நி) திருமதி ஆர்.லலிதா, இ.ஆ.ப, துணை ஆணையர் (பணிகள்) திரு.எம்.கோவிந்த ராவ், இ.ஆ.ப., துணை ஆணையர் (சுகாதாரம்) திரு.பி.மதுசுதன் ரெட்டி, இ.ஆ.ப., வட்டார துணை ஆணையர் டாக்டர் சுபோத்குமார், இ.ஆ.ப., மயிலாப்பூர் காவல் துணை ஆணையர் திரு.என்.எம்.மயில்வாகனன், இ.கா.ப., திருவல்லிக்கேணி காவல் துணை ஆணையர் திரு.எஸ்.செல்வநாகரத்தினம், இ.கா.ப., தொடர்புடைய இதர அரசுத்துறைகளான மீன்வளத்துறை, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்றுவாரியம், கடற்கரை ஒழுங்குப்படுத்துதல் ஆணையம், பொதுப்பணித்துறை, காவல்துறை, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் உணவு பாதுகாப்புத்துறையைச் சார்ந்த உயர் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**